சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 18.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 32/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | ரமணன் |
| தந்தை பெயர் | : | பாலகிருஷ்ணன் |
| கிராமம் | : | செம்மங்குடி |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | போட்டோ கிராபர் |
| வயது | : | 42 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் போட்டோ கிராபராக வேலை செய்து வருகிறேன். நான் இந்து கள்ளர் வகுப்பை சேர்ந்தவர் ஆவேன். அ.சா-1 சுந்தர்ராஜ் தெரியும். ஆஜர் எதிரியை தெரியும்.

அவர் கள்ளர் வகுப்பை சேர்ந்தவர் ஆவார். கடந்த 15.02.2025 ஆம் தேதி மதியம் 3.40 மணியளவில் செம்மங்குடியில் இருந்து மெயின் ரோட்டிற்கு சென்ற போது புதுத்தெரு கடைசியில் எதிரி ராஜா வீட்டின் முன்பாக சண்டை நடந்துக் கொண்டிருந்தது. அ.சா-1-ன் வீட்டில் மின்சார ஒயர் தொங்கிக்கொண்டிருந்து. எதிரி ராஜா அ.சா-1ம் மேற்படி ஒயரை இழுத்துக் கட்டும் படி சொன்னார். அ.சா-1 எனக்கு கட்ட தெரியாது என்று சொன்னார். அதன் பின்னர் இருவருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டு பற புண்ட மவனே என்று பேசி அ.சா-1-யை எதிரி செருப்பால் அடித்தார். அதன் பின்னர் அ.சா-1-யை எதிரி கீழே தள்ளிவிட்டு கழுத்தில் மிதித்தார். பின்னர் எதிரி அரிவாளை எடுத்து அ.சா-1 யை கழுத்தை மிதித்துக்கொண்டு அரிவாளால் வெட்ட முயற்சித்தார். நானும், எனது சித்தப்பா சக்கரவர்த்தியும் போய் தடுத்து சமாதானம் செய்து அ.சா1-யை மருத்துவமனைக்கு செல்லுமாறு சொல்லி அனுப்பினோம். பின்னர் 16.02.2025 ஆம் தேதி திருவாரூர் காவல் துணை கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார். நான் நடந்த விவரம் சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

போட்டோ ஸ்டூடியோ சம்மந்தமாக நான் டிப்ளமோ எதுவும் படிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் கோவில் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். எதிரி வீடு கூரை வீடு என்றால் சரிதான். நான் என் வயலுக்கு சென்றது என்பது மதியம் 3.45 மணி இருக்கும். எனது வயலின் சர்வே எண்.42 விஸ்திரணம் 42 ஏர்ஸ்.1 ஏர்ஸ்க்கு எவ்வளவு விஸ்திரணம் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புதுத்தெரு என்பது எதிரியின் வீட்டுடன் முடிவடைந்து விடுகிறது என்றால் சரிதான். என் வயல் என் வீட்டிலிருந்து வடக்கில் உள்ள நடப்பு கரை மேட்டில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் குறிப்பிடும் வயலுக்கு என் வீட்டிலிருந்து வடக்கு பக்கம் வழியாக செல்லமுடியாது என்றால் சரிதான். என் வயலுக்கு புதுத்தெருவில் உள்ள எதிரியின் வீட்டிலிருந்து 1/2

கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டும் என்றால் சரிதான். அதற்கு அப்பால் உள்ள என் வயல்களுக்கு வயல் வழியாக தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். அந்த வயல்களும் அறுவடைக்கு தயாராக இருந்தது என்றால் சரிதான். எதிரி 2023 ஆம் ஆண்டு தொழுவூர் பஞ்சாயத்தில் ஊராட்சி மன்ற துணை தலைவராக இருந்தாரா என்றால் இல்லை. இவரது தாயார் தான் துணை தலைவராக இருந்தார். 5 வருடங்களுக்கு முன்பு படையாச்சி சமூகத்திற்கு சுடுகாடு எதிரி கட்டும் போது அதை நான் தடுத்தேன் என்றால் எதிரியிடம் நான் எதுவும் சொல்லவில்லை. அதை ஒப்பந்தம் எடுத்து கட்டிவந்த ஒப்பந்த காரரிடம் சுடுகாடானது படையாச்சி என்பவருக்கு என குறிப்பிடாமல் பொது சுடுகாடு என குறிப்பிட வேண்டும் என்று கிராமத்தின் சார்பாக நானும் சிலரும் சொன்னோம். எதிரி அ.சா-1-யை என்ன கலர் செருப்பால் அடித்தார் என்றால் விகேசி செருப்பு கருப்பு நிறம். எதிரி அ.சா-1-ன் எந்த கன்னத்தில் அடித்தார் என்று சொன்னால் இரண்டு கன்னத்திலும் அடித்தார். இரண்டு கன்னத்திலும் அ.சா-1 -யை அடித்த விவரம் பற்றி போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அ.சா-1 மருத்துவனைக்கு சென்றது எனக்கு நேரடியாக தெரியமா என்றால் நேரடியாக தெரியும். அழைத்து சென்றவர் ஊராட்சி மன்ற தலைவர் முனுசாமி என்றால் ஆமாம். சக்கரவர்த்தி என்பவர் எனது எதிர் வீட்டு சித்தப்பா என்றால் சரிதான். நானும் என் சித்தப்பா சக்ரவர்த்தி ஆகியோர் தான் சம்பவ இடத்தில் இருந்தோம் என்றால் அ.சா-2 பாஸ்கர் என்பவரும் இருந்தார். அ.சா-1-யை எதிரி இடது காலால் மிதித்தார் என்றும், அதனை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனக்கும் எதிரிக்கும் உள்ள முன் விரோதத்தை பயன்படுத்தி அ.சா-1 கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அ.சா-1-யை ஜாதியின் பெயரை சொல்லி திட்டவில்லை என்றால் சரியல்ல.

<u>அரசு தரப்பு மறு விசாரணை</u>

எதிரியின் வீடு என்பது மாடி வீடா, கூரை வீடா என்றால் மாடி வீடு தான்.

<u>அனுமதியுடன் கூடுதல் குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திற்கு அருகாமையில் உள்ள எதிரியின் வீடு கூரை வீடா, மாடி வீடா என்றால் தொகுப்பு வீடு அதாவது சிமெண்ட் கான்கிரீட் போடப்பட்டுள்ள வீடு.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.18 14:30:57 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.